# In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 79/2021** **Date:17.02.2026.**

**(PW1)- சங்கீதா**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் தற்போது எந்த வழக்கை பொறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அ.வ.எண். 79/2021 சாட்சி சொல்கிறேன். நான் தாக்கல் செய்த வழக்கிற்க்கு முன்பே பத்மாவதி தங்கச்சி என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஏதுவென்றால் அ.வ.எண் 31/2020 ஆகும். மேற்படி அ,வ.எண் 31/2020 ல் என்ன பரிகாரம் கோரப்பட்டுள்ளது என்றால் சந்தனக்கட்டை முறித்ததாகவும் மண் எடுத்ததாகவும் வழக்கு தாக்கல் செய்துள்ளார். வேறு பரிகரம் கோரவில்லையா என்றால் கேட்கவில்லை. அ.வ.எண். 79/2021 வழக்கை நானும் எனது அம்மாவும் தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். இவ்வழக்கின் பிரதிவாதி யார் என்றால் எனது அம்மாவின் மூத்த அக்காவின் மகள் ஆவார்.

2. எனது அம்மாவிற்க்கும் பிரதிவாதியின் அம்மாவிற்க்கும் தாவா சொத்து எவ்வாறு உரிமைபட்டது என்றால் எனது தாத்தா மற்றும் பாட்டி எழுதி வைத்த உயிலின் அடிப்படையில் கிடைத்த சொத்தாகும். மேற்படி உயிலின் படி எனது தாயாருக்கு எந்த பட்டிகை சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் H பட்டிகை சொத்து ஒதுக்கப்பட்டது. பிரதிவாதியின் தாயார்க்கு உயிலின் படி எந்த பட்டிகை சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் B பட்டிகை சொத்து ஒதுக்கப்பட்டது. நான் தாக்கல் செய்துள்ள உயில் ஆவணத்தின் B பட்டிகை ல் 1வது அய்ட்டமாக சர்வே எண் 85/1 35 செண்ட் புற இடம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி உயிலில் 2 வது அய்ட்டமாக சர்வே எண் 90/1 ல் 26 செண்டும் 3 வது அய்ட்டமாக சர்வே எண் 90/1ல் 10 செண்டும் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. அதே போல் மேற்படி உயிலின் H பட்டிகை சொத்திலும் எனது தாயாருக்கு சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி உயிலில் ஒதுக்கப்பட்ட சொத்துகளை தவிர்த்து வேறு எந்த சொத்துகளும் எனது தாயருக்கு

இல்லை என்றால் சரிதான். மேற்படி உயிலில் I பட்டிகை என்று 6 செண்ட் நிலம் பொதுவாக ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 90/1 மற்றும் 85/1 ஸ்தளத்தில் அடுத்தடுத்து அமைந்துள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 85/1 ல் உயிலின் படி எனது அம்மாவிற்கு ஒதுக்கப்பட்ட சொத்தும் பிரதிவாதியின் அம்மாவிற்கு ஒதுக்கப்பட்ட சொத்தும் தனிதனி கண்டங்களாக உள்ளது என்றால் சரிதான். எனது தாயாருக்கு சர்வே எண் 85/1 ல் எந்த கண்டம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் 2 வது கண்டம் ஒதுக்கப்பட்டுள்ளது.

4. பிரதிவாதியின் தாயாருக்கு மேற்படி 2 வது கண்டத்திற்க்கு வடக்கே உள்ள 3 வது கண்டம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 3 வது கண்டத்திற்க்கு வடக்கு பக்கம் தான் சர்வே எண் 90/1 அமைந்துள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 85/1 ல் பிரிக்கப்பட்ட 3 கண்டங்களுக்கான வரைபடம் உயிலுடன் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி உயிலில் உள்ள வரைபடத்தை மறுதலித்து நான் மாதிரி வரைபடம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சர்வே எண் 90/1 க்குகான வரைபடமும் உயிலுடன் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண் 85/1 ல் உள்ள வீடு கிழக்கு திசை நோக்கி அமைந்துள்ளது என்றால் சரிதான்.

5. தோராய வரைபடம் எதற்காக இணைக்கப்பட்டுள்ளது என்றால் அ.வ.எண். 31/2020 வழக்கில் வழிபாதையும் கிணறும் கிணறுக்கு செல்லும் வழிபாதையும் குறிப்பிடாததால் அதை குறிப்பிடும் பொருட்டு தாக்கல் செய்துள்ளேன். நான் உயிலில் மேற்படி கிணறும் வழிபாதையும் அதை பயன்படுத்தும் முறையும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்டி உயிலில் அவ்வாறு குறிப்பிட்டுறுக்கும் பட்சத்தில் நான் வழிபாதை மற்றும் கிணறு, கிணறுக்கான வழிபாதை குறித்து தோராய வரைபடம மூலம் உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல. தோராய வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள அளவுகள் எதன் அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் உயில் பத்திரத்தில் உள்ள அளவுகளின் அடிப்படையில் குறிப்பிட்டுள்ளேன்.

6. தாவா சொத்தை அளவீடு செய்ய நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுத்தேனா என்றால் எடுக்கவில்லை. அவ்வாறு அளவுகளை நீதிமன்றத்திற்கு தெளிவுபடுத்தும் விதத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்காததால் நான் கோரியுள்ள அ பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் தோராய வரைபடத்தில் தவறான அளவுகளை குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் உண்மையில்

எனக்கு வழிபாதை உரிமை வேண்டும் என்றால் உயிலின் உள்ள அளவுகளின் அடிப்படையில் பரிகாரம் கேட்டு இருப்பேன் என்றாலும் தற்போது உயிலில் குறிப்பிடாத அளவுகளை தோராய வரைபடத்தில் குறிப்பிட்டு உண்மைக்கு மாறாக வழிபாதை உரிமை கோருவதால் எனது அ பரிகாரம் நிலைகதக்கது அல்ல என்றால் சரியல்ல.

7. பி பரிகாரமும் நான் உயிலின் உள்ள அளவுகளின் படி கோராமல் தோராய வரைபடத்தின் படி கேட்டுள்ளதால் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்தக்கது அல்ல என்றால் சரியல்ல, உயிலின் உள்ள அளவுகளின் அடிப்படையில் தான் தோராய வரைபடம் தயார் செய்யப்பட்டுள்ளது. எனது பிராதில் உயிலின் படி நான் பரிகாரம் கோரவில்லை என்றாலும் தோராய வரைபடத்தின் படி தான் பரிகாரம் கோரியுள்ளேன் என்றாலும் சரிதான், உயிலின் அளவுகளின் படி தோராய வரைபடம் தயார் செய்யப்பட்டுள்ளது. எனது வழக்கு ஆ பரிகாரத்தில் குறிப்பிட்டுள்ள 1 மீ அளவை எதன் அடிப்படையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் உயிலில் உள்ள அளவுகள் படி குறிப்பிட்டுள்ளேன். ஆனால் ஸ்தலத்தில் 1 மீ அளவு உள்ளது என்பதை நீதிமன்ற ஆணையர் நியமித்து நான் தெளிவு படுத்தவில்லை என்றால் சரிதான்.

8. மேற்படி உயிலில் பாதையின் அளவு குறித்து குறிப்பிடவில்லை என்றாலும் ஆனால் பாதை உபயோகிப்பதை தடுக்ககூடாது என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அசல் உயில் பத்திரத்தில் அளவு குறிப்பிடப்பட்டுள்ளது. எனது தாயருக்கு ஒதுக்கப்பட்ட சொத்திலும் பிரதிவாதியின் தாயாருக்கு ஒதுக்கப்பட்டா சொத்திலும் பொதுவாக 2 கண்டங்களிலும் சேர்த்து ஒரே கூரையில் உள்ள ஒரு ஓட்டு வீடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி வீட்டின் முக்கால் பாகம் வீடு எனது தாயாருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வீட்டின் அளவுகள் உயிலில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் குறிப்பிடவில்லை.

9. மேற்படி வீடுகளை பிரிக்கும் வகையில் அளவுகளோ காம்பவுண்ட் சுவரோ எல்கை கற்களோ இல்லை என்றால் எல்கை கல் அமைந்துள்ளது. மேற்படி எல்கை கல் யாரால் அமைக்கப்பட்டது என்றால் எனது தாத்தா காலத்திலேயே போடப்பட்டதாகும். எல்கை கற்கள் போடப்பட்டுள்ள விபரம் குறித்து உயிலில் எந்த விபரமும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி விபரம் உயிலில் எந்த பக்கத்தில் உள்ளது என்றால் சாட்சி தனது தாத்தா காலத்தில்லேயே எல்கை கல் போடப்பட்டுள்ளது என்றும் மீண்டும் அவரது அப்பா காலத்தில் சர்வேயர் மூலம்

அளந்து வரைபடம் தயார் செய்யப்பட்டது என்று குறிப்பிடுகிறார். மேற்படி வரைபடம் எப்போது தயார் செய்யப்பட்டது என்றால் அ.வ.எண் 31/2020 ல் தாக்கல் செய்யப்பட்ட பின்பு அளவீடு செய்யப்பட்டது.

10. என்னிடம் காட்டப்படும் மாதிரி வரைபடம் தான் மேற்படி நான் குறிப்பிடும் வரைபடம்மா என்றால் சரிதான். நான் கோரியுள்ளவாறு வீட்டை அளந்து பிரித்தால் பிரதிவாதி வீடு பயன்படுத்தும் தண்மையை இழந்து விடும் என்றால் பிரதிவாதி வீட்டை பயன்படுத்தாமல் அடைத்து வைத்துள்ளார் அதனாலும் வீடு ஒரே கூரையின் கீழ் அமைந்துள்ளதால் பிரதிவாதி வீட்டின் ஓட்டில் உள்ள பூச்சிகள் எனது வீட்டை பாதிக்கும் என்பதாலும் மேற்படி பரிகாரம் அவசியமாகும். ஒரே கூரையில் இரண்டு வீடுகள் இருக்கும் போது சட்டத்தின் படி நான் கேட்பது போல் ஒரு வீட்டை மட்டும் பிரித்து தர முடியாது என்றால் எனக்கு பாதிப்பு ஏற்படாமல் இருக்குமாறு பிரதிவாதிகள் அவர்களது வீட்டை பராமரித்து வைத்துக்கொண்டால் பிரச்சனை இல்லை.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிகாக 27.02.2026 தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

(ஒப்பம்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இரணியல்.